ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2268/53 - 2022 පෙබරවාරි මස 23 වැනි බදාදා - 2022.02.23

*2268/53 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 ஆ (2) என்னும் பிரிவின் கீழ் வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்.***

2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தவிசாளர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரென கருதப்படுகின்றமை காரணமாக வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்.

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66 ஆ (2) ஆம் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த கதிர்காமத்தம்பி சுந்தரலிங்கம் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளரொருவராக தேரந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான வெருகல் பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்.

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவராசா விஜயரகுவரன் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும்.

*வெருகல் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சங்கரப்பிள்ளை சுதாகரன் ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 ஆ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, தேவராசா விஜயரகுவரன் என்பவர் வெருகல் பிரதேச சபையின் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

**சங்கரப்பிள்ளை சுதாகரன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வெருகல் பிரதேசசபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
திருகோணமலை,
2022 பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி,

EOG 02-0618

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.